கல் ஸ்டாப் ஆக வேலைக்கு எடுத்துக்கொள்ளாமல் அவர்களைப் புறக்கணிப்பது, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்காமல் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் இவ்விஷயத்தை கவனித்து அந்தப் பகுதி மக்களுடைய குறையை நிவர்த்திக்க அரசாங் கத்தின் பிரதிநிதி மூலமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள் வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்ட்ராமன் :** இது விஷயமாக சர்க்காருக்கு எழுதி அனுப்பினால் நம்முடைய டைரெக்டர் மூலமாக என்ன நியாயம் வழங்க வேண்டுமோ அதை வழங்கத் தயாராய் இருக்கிறேன்.

**ஒகேனக்கல் அணைத்திட்டம்.**

*** 331-E** கேள்வி.–**திரு. நா. ப. செங்கோட்டுவேலு:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஒகேனக்கல் அணைத்திட்டத்தினால் பயன்பெறும் வட்டங்கள் யாவை ?

(இ) அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Hogenekal Scheme is under investigation. The consent of Mysore to take up the detailed investigation of the scheme is awaited. It is too early to say when the scheme will be completed.

**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** அப்படி ஒரு திட்டம் ஏற்பட்டால் ராசிபுரம் போன்ற பகுதிகளுக்குப் பாசனவசதி அளிக்க வழி வகை இருக்கிறதா என்று அறிய விரும்புகின்றேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது பாசனத் திட்டம் அல்ல. இதனால் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட பாசனத்திற்குக் கிடைக்காது. இது மின்சாரத் திட்டம்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

MR. SPEAKER : Notice under Rule 41 of Sri M. Kalyanasundaram, which has to be taken up to-day, is postponed to 18th July 1962.

## II.—PRIVILEGE MATTER *re* REMARKS IN THE 'MURASOLI' ABOUT THE LEADER OF THE HOUSE.

MR. SPEAKER : I have received notice of a matter of privilege from Sri J. Matha Gowder regarding the remarks in the editorial of the Tamil Daily ' Murasoli ', dated 14th July 1962 about the Hon. the Leader of the House. The hon. Member may now speak.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் உரிமைப் பிரச்சினை போலீஸ் மானியத்தின் மீது கனம் நிதி மந்திரி அவர்கள் இந்த மன்றத்திலே பேசியதைப் பற்றிய குறிப்புடைய தலையங்கம் ஒரு பத்திரிகையில் வந்திருப்பது பற்றித்தான். அதாவது, 14—7—1962-ம் தேதி வெளிவந்திருக்கும் ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகையிலே இந்த மன்றத்தின் கௌரவத்தையே குலைக்கக்கூடிய